## 17

# பெந்தெகொஸ்தே நாள்

## நடபடிகள் 2

*"அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையத்தினம் ஏறக்குறைய மூவாயிரம்பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள்" (நடபடிகள் 2:41).*

பெந்தெகொஸ்தே நாளன்று (நடபடிகள் 2) என்ன நடந்தது என்பதை நாம் எவ்வாறு விளக்க முடியும்? அந்த நாளில் அறியப்பட்டிருந்த உலகம் முழுவதிலும் இருந்து வந்த மக்களில் இருந்து மூவாயிரம் பேர் ஞான ஸ்நானம் பெற்றனர். எவ்வளவு திகைப்புக்குரியது! பேச்சாளரான பேதுரு, ரபீயாகக்கூட இல்லாதிருந்த அறியப்படாத ஒரு பிரசங்கியாராக இருந்தார். கூட்டத்தாருக்குத் தாம் என்ன சொல்லப் போகிறோம் என்பதை அவர் அறியாதவராக இருந்தார். பரிசுத்த ஆவியானவர், அவரது வாயில் சரியான வார்த்தைகளை இட்டார். இயேசு யார் என்பதையும் அவர் என்ன செய்தார் என்பதையும் பேதுரு விளக்கப்படுத்தினார். இது வரலாறு முழுவதிலும் மாபெரும் பதில்செயலைப் பெற்ற ஒரு பிரசங்க மாக இருந்தது. சிலுவை மற்றும் இந்தப் பிரசங்கம் ஆகியவற்றின் மூலமாக, உண்டாக்கப்பட்டவற்றிலேயே மிகவும் ஆச்சரியமான விஷயமாகிய சபை அன்று தொடங்கி நிறைவேற்றப்பட்டது.

தேவன் யாதொன்றையும் தற்செயலுக்கு விடுவதில்லை. அவர் எல்லாவற்றையும் ஒன்றுகூட்டி வைத்துள்ளார். யூதர்களில் ஆயிரக்கணக் கானவர்கள் பஸ்காவுக்காக எருசலேமுக்கு வந்திருந்தனர். பலருக்கு இது ஒரு பிரதானமான மதத் திருப்பயணமாக இருந்தது, ஒருவேளை இது அவர்களின் வாழ்வில் ஒருமுறை மாத்திரமே கிடைக்கும் அனுபவமாக இருந்தது. இந்த மக்களில் சிலர் பெந்தெகொஸ்தே நாள் வரையிலும் *ஐம்பது நாட்களாக* எருசலேமில் தங்கியிருந்தனர். இந்த மக்கள் நெருங்கிக் கூடிக் கூட்டமாக இருந்தனர். இவர்கள் பஸ்கா, சிலுவை மற்றும் வெறுமையான கல்லறை ஆகியவை பற்றிப் பேசுவதை நிறுத்தக் கூடாதிருந்தனர்.

இந்தப் பஸ்காவைப் போன்று வேறு எந்தப் பஸ்காவும் இதற்கு முன் இருந்திருக்கவில்லை! என்ன நடந்திருந்தது என்பதைப் பற்றிச் சிந்தித்துப் பார்ப்பதற்கு இஸ்ரவேல் மக்களுக்குத் தேவன் ஐம்பது நாட்களைக் கொடுத்திருந்தார். பூமியதிர்ச்சிகள் "அவர்களின் பற்களைக் கிட்டித்துப் போகச்செய்திருந்தன" (மத்தேயு 27:51-53ஐக் காணவும்). ஆறாம் மணி நேரமுதல் ஒன்பதாம் மணி நேரம் வரை, நாடு முழுவதும் இருள்

சூழ்ந்திருந்தது (மத்தேயு 27:45; மாற்கு 15:33; லூக்கா 23:44). மக்கள் இயேசுவைச் சிலுவையில் அறைவதைத் தேவன் அனுமதித்திருந்தார், ஆனால் அவர் மரிப்பதை அவர்கள் கண்டு சந்தோஷம் அடைவதை அனுமதிக்க அவர் மறுத்திருந்தார். 12 மணி முதல் 3 மணி வரையிலான இந்த நேரமானது ஆவித்தனமானதாக, இயற்கைக்குப் புறம்பானதாக மற்றும் அச்சமூட்டுவதாக இருந்தது! மக்கள் அசைய மிகவும் திகைப்படைந்து, அசையாதிருக்க மிகவும் பயந்திருந்தனர்!

"நாம் என்ன செய்திருக்கிறோம்?" என்பது கேள்வியாக இருந்தது. கன்மலைகள் பிளவுண்டன. கல்லறைகள் திறக்கப்பட்டன. திறக்கப்பட்ட கல்லறைகளில் இருந்து, தெரிந்த மக்கள் [இறந்த நிலையில் இருந்து] எழுந்து வெளிவந்து, [இயேசுவின்] உயிர்த்தெழுதலுக்குப் பின்பு [எருசலேம் நகரில்] நடமாடினர் (மத்தேயு 27:51, 52). (ஒன்பதாம் மணி வேளையில்) தேவாலயத்தில் ஆசாரியர்கள் ஊழியம் செய்துகொண்டிருக்கையில், தேவாலயத்துத் திரைச்சீலை மேலிருந்து கீழாக இரண்டாகக் கிழிந்தது (மத்தேயு 27:51; மாற்கு 15:38; லூக்கா 23:45ஆ). "சிலுவையில் அறையும்!" என்று கூவியிருந்த வெறிபிடித்த கும்பல் இப்போது சித்த பிரம்மை பிடித்ததாக மாறியிருந்தது. அந்தக் காட்சியைக் கண்டவர்கள் குழப்பத்தில் தங்கள் மார்பில் அறைந்துகொள்ளும் அளவுக்குக் கலவரம் அடைந்தனர். இயேசுவைச் சிலுவையில் அறைய உதவியிருந்த போர்வீரர்களில் ஒருவனான ரோம நூற்றுக்கு அதிபதியும்கூட, அவரை "தேவனுடைய குமாரன்" என்று உணர்ந்தறிந்தார் (மத்தேயு 27:54; மாற்கு 15:39ஐக் காணவும்).

எருசலேமில் கூடியிருந்த மக்கள் யாவரும் *ஐம்பது நாட்களுக்கு* வெறும் கல்லறையைக் காண முடிந்தது. இயேசு உயிர்ப்பிக்கப்பட்டிருந்தார் என்பதைப் பிலாத்துவும் யூதத்தலைவர்களும் அறிந்திருந்தனர். தேடும் குழு எதுவும் அனுப்பப்படவில்லை. அப்போஸ்தலர்களிடத்தில் கேள்விகள் எதுவும் கேட்கப்படவில்லை. சீஷர்களுக்கு முன்னால் விரோதிகள் அதை அறிந்திருந்தனர்.

இயேசு உயிர்ப்பிக்கப்பட்டிருந்தார். அவர் மீண்டும் மரிக்கவில்லை; மாறாக அவர் நாற்பது நாட்கள் அளவாகத் தமது சீஷர்களுக்குக் காட்சி யளித்த பின்பு (நடபடிகள் 1:3), பரலோகத்திற்கு தமது பிதாவிடம் ஏறிச்சென்றார். அவர் மேகங்களில் எடுத்துக்கொள்ளப்பட்டு இப்போது தேவனுடைய வலதுபுறத்தில் அமர்ந்துள்ளார் (எபேசியர் 1:20; கொலோ செயர் 3:1). அவர் பரத்துக்கேறுவதற்கு முன்பு, தமது அப்போஸ்தலர் களிடத்தில், "பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலன டைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்" என்றுரைத்தார் (நடபடிகள் 1:8). இந்த வாக்குத்தத்தமானது பல நாட்களுக்குப் பின்பு, பெந்தெகொஸ்தே நாளன்றுதான் நிறைவேற்றப்பட்டது.

அந்த நிகழ்ச்சியின்போது, தேவன் பெலத்த காற்றுடன் வந்தார். பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்களை நிரப்பினார். அக்கினிபோன்ற பிளவுபட்ட நாவுகள் அவர்கள்மீது அமர்ந்தன. எல்லா அப்போஸ்தலர்களும்

தேவனுடைய மகத்துவங்களை அந்நியமொழிகளில் பிரசங்கிக்கத் தொடங்கினர். பின்பு பிரதான பிரசங்கத்தில் பேதுரு, *ஐம்பது நாட்களுக்குப் முன்பு* நடந்திருந்தது என்ன என்பது பற்றிப் பிரசங்கித்தார்! அவர் தமது உரையைக் கேட்டவர்கள் சாட்சிகளாகவும் குற்றம் இழைத்தவர்களாகவும் இருந்தார்கள் என்று கூறினார். அவர்களை அவர் கொலைகாரர்கள் - தேவனுடைய குமாரனைக் கொன்றவர்கள் - என்று முத்திரைகுத்தினார்! அவர்கள் இருதயங்களில் குத்தப்பட்டனர். அவர்கள் பயத்தில் அலறினர். அவர்கள் மனந்திரும்பினர். மூவாயிரம்பேர் தங்களின் பாவமன்னிப்பிற்காக ஞானஸ்நானம் பெற்றனர். அவர்களின் மனமாற்றத்துடன், எருசலேமில் இந்த பெந்தெகொஸ்தே நாளன்று சபை தொடங்கியது.

"அணிவகுத்துச் சென்றுள்ள படைகள் யாவையும், அமர்ந்த பாராளு மன்றங்கள் யாவும், ஆண்ட அரசர்கள் யாவரும்"[1] இயேசு கிறிஸ்துவின் தனிப்பட்ட வாழ்வு அளவுக்கு நம்மைப் பாதித்தது இல்லை என்று வரலாறு வெளிப்படுத்துகிறது. அந்த மூவாயிரம் ஞானஸ்நானங்கள் தற்செயலானதாக இருக்கவில்லை. சாத்தான், தான் நினைத்தது போன்று அத்தனை சாமர்த்தியசாலியாக இருக்கவில்லை. சாத்தானை குறைத்து மதிப்பிடவேண்டாம்; சாத்தானை அதிகமாக மதிப்பிடவும் வேண்டாம். சாத்தான், தான் தேவனைக் கொன்றுவிட முடியும் என்று நினைத்தானா? அவன் தேவனைக் கொன்றாலும், அவனால் தேவனை மரித்த நிலையிலேயே வைக்க இயலாது என்பதை அவன் நிச்சயமாக அறிந்திருந்தான். சாத்தான், தான் வெற்றியடைந்ததாக நினைத்துக்கொண்டு தன்னைத்தானே தோல்வியடையச் செய்துகொண்டான்.

*சிலுவையைத் தவிர ...*
*வேறு வழி எதுவும் இல்லை!*

---

குறிப்பு

[1]James Allan Francis, "Arise, Sir Knight," in *"The Real Jesus" and Other Sermons* (Philadelphia: Judson Press, 1926), 123-24.